ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1900/5 - 2015 පෙබරවාරි මස 02 වැනි සඳුදා - 2015.02.02

*1900/5 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மாகாண மாகாண சபை

அறிவித்தல்

வட மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் என்ற வகையில் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ், எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமாக இதன் கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குவிதிகள் இத்தால் ஆக்கப்படுகின்றன. இக்கட்டளை 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதுடன் அத்தினத்திற்கு முன்புள்ள திகதி தொடக்கம் செயற்படுத்தும் வகையில் விடயத்திற்கு உரிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1626 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 2009.10.30 ஆந் திகதியின் கட்டளை மாற்றப்பட்டுள்ளது.

க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சரும் நிதியும்
திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி,
மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும்,
தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு,
சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப்
பொறுப்பான அமைச்சரும்.
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
இல. 26, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
2015, சனவரி 16.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் மாநகர முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்துகின்றமை சம்பந்தமான ஒழுங்கு விதிகள் என அழைக்கப்படும்.

2. மாநகர சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்ற மாநகர முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்றைச் செலுத்த முடியும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| * | மாநகர முதல்வர் | 30,000.00 |
| * | மாநகர பிரதி முதல்வர் | 25,000.00 |
| * | மாநகரசபை உறுப்பினர் | 20,000.00 |

(உபசரணைக் கொடுப்பனவுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது).

3. பின்வரும் சந்தர்ப்பங்களில் மாநகர முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர் ஒருவர் குறித்த கொடுப்பனவுகள் சம்பந்தமாக உரிமைகோர முடியாது :-

(i) கொடுப்பனவிற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட மாதாந்த சபைக் கூட்டங்கள் அல்லது செயற்குழுக்கூட்டங்கள் எவற்றிலும் பங்கேற்காதிருத்தல் ;

அல்லது

(ii) யாதாயினும் குற்றச் செயல் சம்பந்தமான குற்றச்சாட்டொன்றின் பேரில் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் இருத்தல் ;

அல்லது

(iii) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 (1ஆ) (அ) பிரிவிற்கு அமைய மாநகரசபையின் அல்லது மாநகர முதல்வரின் அல்லது பிரதி முதல்வரின் அல்லது உறுப்பினரின் நடவடிக்கைகளும் பணிகளும் இடைநிறுத்தப்பட்டிருத்தல்.

3.1 எவ்வாறெனினும் -

(i) தடுப்புக் காவலில் அல்லது சிறையில் அல்லது விடுமுறையிலிருந்து அல்லது சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியானது, ஏதும் மாதம் ஒன்றின் பகுதியாக இருக்கும் போது அக்காலப்பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்குபற்றியிருப்பதன் பேரில் அக்காலப்பகுதிக்குரிய விகிதாசார அடிப்படையில் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம் ;

(ii) மருத்துவக் காரணங்களின் பொருட்டு உரிய ஆதாரம் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்துடன் சமுகமளிக்காது இருந்திருப்பின் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம் ;

(iii) மாநகர முதல்வர், பிரதி முதல்வர் அல்லது உறுப்பினர் ஒருவர் கடமைப் பணிகளில் முறையான அங்கீகாரத்துடன் ஈடுபடுகின்ற சந்தர்ப்பம் ஒன்றில் சபைக் கூட்டத்திற்கு அல்லது செயற்குழுக் கூட்டத்தில் பங்குகேற்காது இருப்பின் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம்.

2- 494/1

---

**வட மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

வட மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் என்ற வகையில் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 255 ஆம் அத்தியாயமாகிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் 193 ஆம் பிரிவின் கீழ், எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள நகர சபை தவிசாளர்,நகர சபை துணைத் தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமாக இதன் கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குவிதிகள் இத்தால்

ஆக்கப்படுகின்றன. இக்கட்டளை 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதுடன் அத்தினத்திற்கு முன்புள்ள திகதி தொடக்கம் செயற்படுத்தும் வகையில் விடயத்திற்கு உரிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1626 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 2009.10.30 ஆந் திகதியின் கட்டளை மாற்றப்பட்டுள்ளது.

க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சரும் நிதியும்
திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி,
மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும்,
தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு,
சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப்
பொறுப்பான அமைச்சரும்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
இல. 26, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
2015, சனவரி 16.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் நகரசபை தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்துகின்றமை சம்பந்தமான ஒழுங்கு விதிகள் என அழைக்கப்படும்.

2. நகர சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்ற தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்றைச் செலுத்த முடியும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| * | நகர சபைத் தவிசாளர் | 25,000.00 |
| * | துணைத் தவிசாளர் | 20,000.00 |
| * | சபை உறுப்பினர் | 15,000.00 |

(உபசரணைக் கொடுப்பனவுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது).

3. பின்வரும் சந்தர்ப்பங்களில் நகர சபைத் தவிசாளர், துணைத் தவிசாளர் அல்லது சபை உறுப்பினர் ஒருவர் குறித்த கொடுப்பனவுகள் சம்பந்தமாக உரிமைகோர முடியாது :-

(i) கொடுப்பனவிற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட மாதாந்த சபைக் கூட்டங்கள் அல்லது செயற்குழுக்கூட்டங்கள் எவற்றிலும் பங்கேற்காதிருத்தல் ;

அல்லது

(ii) யாதாயினும் குற்றச் செயல் சம்பந்தமான குற்றச்சாட்டொன்றின் பேரில் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் இருத்தல் ;

அல்லது

(iii) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 (1ஆ) (அ) பிரிவிற்கு அமைய நகரசபையின் அல்லது நகர சபைத் தவிசாளரின் அல்லது துணைத் தவிசாளரின் அல்லது சபை உறுப்பினரின் நடவடிக்கைகளும் பணிகளும் இடைநிறுத்தப்பட்டிருத்தல்.

3.1 எவ்வாறெனினும் -

(i) தடுப்புக் காவலில் அல்லது சிறையில் அல்லது விடுமுறையிலிருந்து அல்லது சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியானது, ஏதும் மாதம் ஒன்றின் பகுதியாக இருக்கும் போது அக்காலப்பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்குபற்றியிருப்பதன் பேரில் அக்காலப்பகுதிக்குரிய விகிதாசார அடிப்படையில் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம் ;

(ii) மருத்துவக் காரணங்களின் பொருட்டு உரிய ஆதாரம் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்துடன் சமுகமளிக்காது இருந்திருப்பின் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம் ;

(iii) நகர சபைத் தவிசாளர், துணைத் தவிசாளர் அல்லது சபை உறுப்பனர் ஒருவர் பணிக் கடமையில் முறையான அங்கீகாரத்துடன் ஈடுபடுகின்ற சந்தர்ப்பம் ஒன்றில் சபைக் கூட்டத்திற்கு அல்லது செயற்குழுக் கூட்டத்தில் பங்குகேற்காது இருப்பின் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம்.

2- 494/2

---

**வட மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

வட மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரும் என்ற வகையில் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ், எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள பிரதேச சபைத் தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமாக இதன் கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குவிதிகள் இத்தால் ஆக்கப்படுகின்றன. இக்கட்டளை 2014, நவெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகின்றது.

க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சரும் நிதியும்
திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி,
மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும்,
தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு,
சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப்
பொறுப்பான அமைச்சரும்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
இல. 26, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
2015, சனவரி 16.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் பிரதேச சபைத் தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்துகின்றமை சம்பந்தமான ஒழுங்கு விதிகள் என அழைக்கப்படும்.

2. பிரதேச சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்ற தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்றைச் செலுத்த முடியும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| * | பிரதேச சபைத் தவிசாளர் | 25,000.00 |
| * | துணைத் தவிசாளர் | 20,000.00 |
| * | சபை உறுப்பினர் | 15,000.00 |

(உபசரணைக் கொடுப்பனவுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது).

3. பின்வரும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபைத் தவிசாளர், துணைத் தவிசாளர் அல்லது சபை உறுப்பினர் ஒருவர் குறித்த கொடுப்பனவுகள் சம்பந்தமாக உரிமைகோர முடியாது :-

(i) கொடுப்பனவிற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட மாதாந்த சபைக் கூட்டங்கள் அல்லது செயற்குழுக்கூட்டங்களில் எவற்றிலும் பங்கேற்காதிருத்தல் ;

அல்லது

(ii) யாதாயினும் குற்றச் செயல் சம்பந்தமான குற்றச்சாட்டொன்றின் பேரில் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் இருத்தல் ;

அல்லது

(iii) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 (3) (அ) பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அல்லது பிரதேச சபைத் தவிசாளரின் அல்லது துணைத் தவிசாளரின் அல்லது சபை உறுப்பினரின் நடவடிக்கைகளும் பணிகளும் இடைநிறுத்தப்பட்டிருத்தல்.

3.1 எவ்வாறெனினும் -

(i) தடுப்புக் காவலில் அல்லது சிறையில் அல்லது விடுமுறையிலிருந்து அல்லது சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியானது, ஏதும் மாதம் ஒன்றின் பகுதியாக இருக்கும் போது அக்காலப்பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்குபற்றியிருப்பதன் பேரில் அக்காலப்பகுதிக்குரிய விகிதாசார அடிப்படையில் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம் ;

(ii) மருத்துவக் காரணங்களின் பொருட்டு உரிய ஆதாரம் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்துடன் சமுகமளிக்காது இருந்திருப்பின் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம் ;

(iii) பிரதேசத் சபைத் தவிசாளர் , துணைத் தவிசாளர் அல்லது சபை உறுப்பனர் ஒருவர் கடமைப் பணிகளில் முறையான அங்கீகாரத்துடன் ஈடுபடுகின்ற சந்தர்ப்பம் ஒன்றில் சபைக் கூட்டத்திற்கு அல்லது செயற்குழுக் கூட்டத்தில் பங்குகேற்காது இருப்பின் இக்கொடுப்பனவு செலுத்தப்படலாம்.

2- 494/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.